Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/3111 of 1953.

விரோதிஞு (1889) ஆனி மீ ௨௰ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதிஞு மாசி மீ கருவ வெள்ளிக்கிழமை (26 February. 1965) [இல-சஎ]

திருவியலூர் — உய்யவந்ததேவநாயனர் அருளிச்செய்த

## திருவுந்தியார்

### மூலமும் — உரையும்

[ சைவப்புலவர் திரு இ. செல்லத்துரை அவர்கள் ]

( முற்றொடர் - 17)

கருதுவதன் முன்னங் கருத்தழியப் பாயும்
ஒருமகள் கேள்வனென் றுந்தீபற
உன்ன வரியனென் றுந்தீபற. 19.

கொ — கூ: (திருவருளோடு கூடிநிற்கும் நீ, சிவ பெருமானைக் கூட வேண்டுமென்று) கருதுவதன் முன்னம், (உனது) கருத்து அழிய (த்தக்கதாய்) ஒரு மகள் கேள்வன் பாயும் என்று உந்தீபற; (மேலும், அங்ஙன மன்றி உனது போதத்தால்) உன்ன அரியன் என்று(ம்) உந்தீபற.

பதவுரை: கருதுவதன் முன்னம் — திருவருளோடு கூடி நிற்கும் நீ சிவபெருமானைக் கூடவேண்டும் என்று விரும்புவதற்கு முன்னே, கருத்து அழிய — அவ்விருப்பமொன்று உன்னிடத்திலே உளதாவதில்லையாய்ப் போகும்படிக்கு, ஒருமகள் கேள்வன் பாயும — ஒப்பற்ற திருவருளாகிய பராசக்தியோடு இரண்டறக்கலந்து நின்ற சிவபெருமான் உன்னிடத்தே பொருந்துவன்; என்று உந்தீபற...... உன்ன அரியன் (மேலும் அங்ஙனம அறிந்து அநுபவித்தற்பாலனுகிய அச்சிவ பெருமான்) உனது போதத்தால் அறிந்து அநுபவித்தற்கு அரியவன் ஆவன் என்று உந்தீபற

"கருதுவ தன்முன் கருத்தழி" என்றும் பாடம்.

சிவன் திருவருளோடு பின்னமின்றிருந்து, அத்திருவருளை ஆன்மா கூடிய ஞான்றே தானுங்கூடிச் சுகஞ் செய்வானுதலின், அத்திருவருளின் வேருய் இறவனைத் தேடவேண்டியதில்லையென்பார், "உன்ன அரிய"னுய்க) "கருதுவதன் முன்னங் கருத்தழியப் பாயும" என்றும், அவன் 'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சக்தி பின்னமிலா' வியல்பினன் என்பார். 'ஒருமகள் கேள்வன்' என்றும் கூறினர்.

இனி, இச்செய்யுளின் பொருளமைந்த திருக்களிற்றுப்படியார்ச் செய்யுளும் அதன் பழைய உரையும் வருமாறு:

அன்றிவரும் ஐம்புலனும் நீயம் அசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்கும் — சென்று
கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும
ஒருமகள்தன் கேள்வன் உனக்கு. 35

'உனககு ஆவசியகமன்றி வரும் பஞ்சேந்திரியங்களும் உன்னுடைய போதமும் சலனமிலலாமல் ஒரு படித்தாய் நிறகவே சென்று நினைககிறதறகு முனபு அந்த நினைவழியும்படிக்குப் பொருந்தும் ஒப்பற்ற திருவருளுககு முதன்மையாகிய சிவன் உனக்கு முன்னிற்கும்".

இரவு பகலில்லா வின்பவெளி யூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரைய விரையநின் றுந்தீபற. 20.

கொ—கூ: (நீ) இரவு (ஆகிய ஆணவமும்) பகல் (ஆகிய மாயையும்) இலலா(த) இனப வெளி (ஆகிய திருவருள்) ஊடு (+ஏ) விரைய விரைய (நின்று) விரவி விரவி நின்று உந்தீபற; உந்தீபற......

பதவுரை: இரவு பகல இல்லா — இருள்போல்வதாகிய ஆணவமும பகல்போலவதாகிய மாயா மலமும் ஏனைக் கனம மலமும இல்லாத, இன்பவெளி உடே— இன்ப வெளியாகிய திருவருளுடனே, விரைய விரைய விரவி விரவி நின்று — மிககவிரைவாகச் சற்றேனும இடையீடுபடாமற் பொருந்தி நின்று, உந்தீபற; உந்தீபற..........

ஆணவம மாயையாகிய இருமலமும் இல்லையாதல் கூறுமுகத்தால் ஏனைக கனமமலமும இல்லையாதல உணர வைககப்படடது. வைக்கவே, மும்மல நீககமே திருவருளோடு பரிபூரணமாய்க் கலநது நிறகும தீவிரதர சத்திநிபாத நல்லயனபதும பெற்றும்.

இரவு என்பதற்குக் கேவல நிலை எனவும், பகல் என்பதற்குச் சகலநிலை எனவும் பொருள் உரைப்பினும் அமையும்.

இனி இச்செய்யுளின் கருத்தமைந்த திருக்களிற்றுப்படியார்ச செய்யுளகளும பழையஉரையுமவருமாறு:

உண்டென்னில் உண்டாகும் இல்லாமை இலலையெனில்
உண்டாகும ஆனமையின ஒன்றிரண்டாம் — உணடில்லை
என்னு மவைதவிர்ந்த இன்பத்தை எய்துபவகை
உன்னலவன உனனுமனே யாம

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

### நற்சிந்தனை

ஆரூறுக் கப்பால் ஆனந்தக் கூத்து
ஆரூறுக் கப்பால் ஆனந்த வீடு
ஆரூறுக் கப்பால் ஆர்தான் ஈடு
ஆரூறுக் கப்பால்சென்றோரைக் கூடு.

### சிவராத்திரிதினம்

#### திருக்கேதீச்சரத்தில்

எதிர்வரும் முதலாம் திகதி திருக்கேதீச்சரத்தில் நடைபெறும் சிவராத்திரிவிழாவை ஒட்டி, அங்கே அடியார்கள் போய்வருவதற்கு ஏற்ற பஸ் வசதி, றயில வசதிகள் எல்லாம செய்யப்பட்டு வருகின்றன. கொழும்பு இந்துவாலிபர் சங்கமும் இங்கே தொண்டாற்ற வருவதாக அறிவித்திருக்கிறது. இன்னும் இங்கே வருகின்ற அடியார்களுக்கு வேண்டிய உணவளிக்கத் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையும், பாலாவி பாசன சேவாசங்கமும் முன்வந்திருக்கின்றன.

மேலும் ஈழத்துச்சிவனடியார் திருக்கூட்டமும் இங்கேயுள்ள திருவாசக மடத்தில் புராணபடனம், கூட்டு வழிபாடு போன்ற பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறதென அறிகிறோம்.

x x x

#### கைதடியில்

கைதடி கிழக்கு இந்துவாலிபர் சங்கத்தின ஆதரவில் ஷியூர் வீரகத்திப்பிள்ளையார் கோவலில் 1-3-65 திங்கட் கிழமை இரவு சிவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கிறது, இரவு முழுவதும் பூசைகள். அபிடேகங்கள், சொற்பொழிவுகள், புராண படனங்கள், இன்னிசை விருந்துகள் போன்ற இன்னும பல நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. அன்று பகல் தீட்சைபெற விரும்பும் அடியார்களுக்கு தீட்சை அளிப பதற்கும ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறன.

மேற்படி வாலிபர் சங்கத்தின் தொண்டுகள் சைவ உலகத்திற்கு மகிழ்ச்சியைத தருவதாக இருக்கின்றன

### தேவார வகுப்பு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் சபை நாவலர் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் முற்பகல் 8-30 மணி தொடக்கம் 10 மணி வரை தேவார வகுப்பு மாணவர்களுக்குதேவார சங்கீத பூஷணம் திரு. சி. நடராசா அவர்களால் நடாத்தப்படும். ஷிதேவாரவகுப்பு 6-3-65 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிககு நாவலர் மண்டபத்தில நாளுக்கு ஆரமபிக்கப்படும்

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்.
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 24-2-65.

## சிவராத்திரி வழிபாடு

திருவருளை முன்னிட்டு நிகழும் மாசி மீ கஅ-உ (1-3-65) திங்கட்கிழமை சிவராத்திரிவழிபாடு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்படும்.

**நிகழ்ச்சிகள்:**

நான்குயாமங்களும் நாவலர் மண்டபத்தில்
நடராசப் பெருமானுக்குப் பூசை.

இரவு: 7—9 தமிழ்மறையோதல்
தேவார சங்கீத பூஷணம்
திரு. சி. நடராசா அவர்கள்
,, 9—11 சிவபூஜா மண்டபத்தில் சிவபூசை
,, 11—1 சங்கீத கதாப்பிரசங்கம்
"விருத்தகுமாரபாலரான சரிதம்"
திரு. ஆ. கணபதிப்பிள்ளை அவர்கள்
(முன்னுள் ஆசிரியர், கோப்பாய் அரசினர் பாடசாலை)
,, 2 — 4 புராணபடனம்
கந்தபுராணம் — அடிமுடிதேடுபடலம்.

சைவாபிமானிகள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்,
26-2-65.

மு. மயில்வாகனம்.
சமயப்பிரசார அமைச்சர்.

கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியார் அருளிச்செய்த

## சிவப்பிரகாசம்

(முற்றொடர் 5)

### இந்நூலுரை வரலாறு

இந்த வியாக்கியானஞ் செய்தது மெய்கண்ட சந்ததியில் காவை யம்பலநாதத் தம்பிரானர் திருவடிமரபில் ஆசாரியரில் மதுரையில ஞானப்பிரகாசத் தம்பிரானர் திருவடியடியாரில் சிவப்பிரகாசன் செய்த வியாக்கியானமென அறிக.

இந்தச் சிவப்பிரகாசமாகிய நூலுக்கு முன்னேர்களும் வியாக்கியானஞ் செய்திருகக இப்பொழுது இநத வியாக்கியானஞ் செய்யவேண்டுவ காரணம் ஏதென்னில், முன்னுளள தம்பிரான்கள் எழுதிய வியாக்கியானங்களெலலாம் பொழிப்புரையாக எழுத, அதனேடு சமயிகள் கருத்துககளுங்காட்டி என் தம்பிரான் ஞானபபிரகாசத்தமபிரானர் எழுதின வியாக்கியானத்தின் வழியே தொந்தனையும் பாட்டுஞ் சேர்த்து, அது நீங்கலாகக் காவை அம்பலநாதத் தம்பிரானர் இந்நூலின் கருத்தாகச் செய்தருளின குறள் வெண்பா நூறும் இந்நூலிற் பாட்டுக்கள் தோறும் பகுத்துச் சேர்த்து, அந்தக் குறளின் கருத்தாகிய பொருள்களுக்கும் தவறு வரால் முன்னுண்டான வியாக்கியானங்களின் பொழிப்போடும் விரிவோடும்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

### இங்கிலாந்தில் புகழ்நாட்டும இலங்கை மாணவன்

—0—

இங்கிலாந்தில் ஆக்ஸ்போட் பல்கலைக்கழகத்திற்கும், கேம்பிறிச் பல்கலைக்கழகத்திற்கும் இடையே நடைபெற்ற மல்யுத்தப் போட்டியில் மூன்று முறை கேம்பிறிச் பல்கலைக் கழகத்திற்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்த பெருமை இலங்கை மாணவராகிய திரு. பொன்னம்பலம் இராஜேந்திரம் அவர்களைச் சேருகிறது. இம்முறை நடைபெறும் போட்டியிலும் அவர் வெற்றி பெறுவாரேயானல் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நானகு முறை தொடர்ந்து கேம்பிறிச் பல்கலைக் கழகத்திற்கு வெற்றி ஈட்டிக்கொடுதத ஆங்கிலேயப் பெருமகன் ஒருவரோடு ஒருங்கு வைத்து எண்ணப்படுவார் என அறிகிறோம்.

### கைதடியில் வாணிகலைக்கழக வகுப்புக்கள்

மேற்படி கழகத்தின் பண்டித சைவப்புலவர் வகுப்புக்கள் 7-3-65 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் கைதடி முத்துக் குமாரசாமி வித்தியாசாலையில் சனி, ஞாயிறு நாட்களில் மட்டும் தொடர்ந்து நடைபெறுமெனவும் சென்ற கிழமை நடைபெற்ற பண்டிதர்த் தேர்விற்குத் தமது சங்கக் கைதடிக்கிளை 20 மாணவர்களை அனுப்பியிருப்பதாகவும், அதன் பொறுப்பாளர் அறிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

எதிர்வரும் 2-3-65செவ்வாய்க் கிழமை சிவராத்திரித் திருநாளை முன்னிட்டு இந்துசாதனம் அலுவலகத்திலும், சைவப் பிரகாச அச்சகத்திலும் கருமமாற்றுவோருக்கு விடுமுறை வழங்கப் பெறுமென்பதை அபிமானிகளுக்கு அறியத்தருகிறோம்.

— அதிபர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

குரோதி ௵ மாசி மீ
௧௩௳ வெள்ளிக்கிழமை


## மகாசிவராத்திரி

இவ்வருடம் மகாசிவராத்திரி 1-3-65 திங்கட்கிழமை கொண்டாடப்படும். சிவராத்திரி என்பது சிவனுக்குரிய இரவு எனப்பொருள்படும். சிவராத்திரியின் மகிமைகள் கந்தபுராணம், சிவராத்திரி புராணம், பிரமோத்கரகாண்டம முதலிய புராணங்களிலும் வாதுளம் முதலிய ஆகமங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. ஓர் ஊழி முடிவில் உயிர்களெல்லாம் மாயையில் ஒடுங்கி உலகம் முழுவதும் இருளால் மூடப்பட்டிருக்குங் காலத்தில் உமாதேவியார் சிவபெருமானைப் பூசித்த காலமெனவும், பிரமாவும் விஷ்ணுவும் தங்களிருவருள் யார் பிரமம் என்பதையறியச் சண்டையிட்டகாலத்தில் சிவபெருமான் அவர்களிருவருக்கும் நடுவில் அக்கினிப்பிழம்பாகக் காட்சி அளித்த காலமெனவும் சிவராத்திரியைக் கூறுவர். சிவராத்திரி சிவவிரதங்களுள் மிகச் சிறந்தது விரதம் ஒரு மனிதன் தனது மனததைப் புலன் வழிச் செல்லாது தடுத்து சிவபெருமானுடைய திருவடிகளை இடையறாது உள்ளத்தில் சிந்திக்கத் துணை செய்வது. அதனல் அவனுடைய பசு கரணங்கள் சிவகரணங்களாக மாறிவிடும். அவனிடத்தில் பசுத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை விளங்கும். உபவாசமிருத்தலும் நித்திரை விழித்தலும் இப்பெரிய நன்மையை ஒருவன் அடைதற்கு உறுதுணையாகவுள்ளன. சிவராத்திரியின் முன்தினம் ஒருவேளை உணவருந்தி சிவராத்திரி தினம் உபவாசமாகவிருந்து இரவு முழுவதும் நித்திரை விழித்து நான்கு யாமங்களும் சிவவழிபாடாற்றவேண்டும. நான்கு யாமங்களும் சிவலிங்கபூசைசெரிசிக்கவேண்டும். சிவநாமங்களை ஒதுதலும் சிவபுராண படனம் செய்தலும் சிவத்தியானமும் இரவு முழுவதும் செய்யற்பாலன. மறுநாட்காலை சிவனடியார்களுடன் பாரணை செய்தல்வேண்டும். மறுநாள் பகல் நித்திரை புரிதல்கூடாது. அங்ஙனம் செய்தல் ஆயிரம் பிராமணரை ஒரு காரணமுமின்றிக் கொன்ற பாவத்துக்குச் சமமாகும் எனக்கூறப்படுகின்றது.

மக்களுட்சிலர்சிவராத்திரி விரதத்தை இக்காலம்முறையாக அநுட்டிக்கின்றார்களில்லை அவர்கள் நித்திரை விழிப்புக்குச் சீட்டாடுவதும் திரைப் படம் பார்ப்பதும், கூத்துப் பார்ப்பதும் செய்கின்றார்கள். இவ்வாறன வேடிக்கைகளில் பங்குபற்றி நித்திரை விழிப்பது குளிக்கப் போய்ச் சேறு பூசுந் தன்மையையொக்கும. மக்கள் முறையான வழியில் பக்தி சிரத்தையுடன் ஆசார சீலராய் இப் புண்ணிய விரதத்தையநுட்டித்து இஷ்ட சித்திகளையடைவார்களாக.

## கதிர்காமத்திலுள்ள மடங்கள்

கதிர்காமம் ஈழநாட்டில் முருகப்பெருமான் கோயில் கொண்டெழுந்தருளி அடியார்களுக்கு இஷ்ட சித்திகளை உதவும் புண்ணிய தலமாகும். முருகப்பெருமானை இடையறாது உபாசித்து அவருடைய அநுக்கிரகத்தைப் பெற்ற அருணகிரிநாதர் கதிர்காம வேலவரைத் துதித்து அற்புதமான திருப்புகழ்ப் பாக்களைப் பாடியிருக்கின்றார். ஈழநாட்டிலும் பாரதநாட்டிலும் வசிக்கும் இந்துக்கள் வருடந்தோறும் இத் தலத்துக்கு யாத்திரை செய்கின்றார்கள். இப்பொழுது எமது அரசாங்கம் அமைத்துள்ள பிரயாணக் கட்டுப்பாடுகளினுல் பாரத நாட்டிலிருந்து கதிர்காமத் தலத்துக்கு யாத்திரை செய்பவர்கள் தொகை மிக மிக அருகிவிட்டது. கதிர்காமம் பௌத்தர்களுக்கும் ஒரு விசேட யாத்திரைத் தலமாகும. இஸ்லாம் மதத்தவர்களும் கிறீஸ்தவர்களும் கதிர்காமத் தலத்தை யடைந்து வழிபட்டு வருகின்றார்கள். மக்கள் சாதி மத பேதமின்றிச் சகோதரமனப்பான்மையுடன் இறைவனை வழிபடுகின்ற முக்கிய தலமிதுவேயாகும். இவ் விதமான சமரச பாவனையுடன் மக்கள் வழிபாடாற்றுதற்கு நமது ஈழநாட்டில் வேறொரு தலமுமில்லை. இத்தகைய திவ்விய தலத்தில் அடியார்கள் தங்கி முருகப்பெருமானை வழிபடுதற்க நம்மவர்கள் மடாலயங்களை நிறுவியுள்ளனர். இம்மடாலயங்கள் சாதாரண விடுதிச்சாலைகளல்ல. ஒவ்வொரு மடாலயத்திலும் இறைவன் திருவுருவங்கள் தாபிதது வழிபடப்படுகின்றன. இறைவன் புகழை விளக்கும் நூல்கள் படிக்கப்படுகின்றன. இறைவனுடைய தோத்திரங்கள் ஓதப்படுகின்றன. திருவிழாக்காலங்களில் சுவாமி வீதிவலம் வரும்பொழுது ஒவ்வொரு மடாலயத்திலும் மண்டகப்படி வைத்து கர்ப்பூர ஆராதனை செய்யப்படுகின்றது. இவற்றையெல்லாம் சிந்திக்கும் பொழுது ஒருமடாலயம் ஒரு தேவாலயத்துக்குநிகரென்பது தெளிவாகும் இன்னுமஇறைவன் புகழை மக்கள் அறியவும் இறைவனை வழிபடும் வழி முறைகளை உணர்த்தவும், உண்டி கொடுக்கவும் உய்யும் வழி காட்டவும ஒரு மடாலயம் பயன்படுகின்றமையினுல் அது தேவாலயத்திலும சிறந்ததெனவும் கூறலாம்.

"திடம்பெற்ற ஞானிகள்
சேர்க்கையினுல்
பசி தீர்க்கையினுல்
உடம்புற்ற உண்மை
உறுகையினுல்
உபதேசிக்கையினுல்
இடம்பெற்ற மங்கை
பங்காளர் அடியார்
இருக்கையினுல்
மடம்பெற்ற பேறு திருக்
கோயிலுக் கில்லை
வையகத்தே",

இத்தகைய நன்மைகளைப் பயக்கும் மடாலயங்களை இப்பொழுதிருக்கும் இடங்களிலிருந்து அகற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானஞ் செய்துள்ளது. மடங்களின் உரிமைக்காரருக்கு அரசாங்கம் பின்வரும் அறிக்கையை அனுப்பியிருக்கின்றது. "புதிய நகரில மடங்களைக் கட்டுவதற்குக் காணிகோரி மடங்களின் சொந்தக்காரர்கள் இன்னுய ஒரு மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்" இந்த அறிக்கையின் பிரகாரம் பழைய மடங்கள் அகற்றப்பட்டுப் புதிய நகரில் அவை அமைக்கப்பட வேண்டும், அரசாங்கம் இவவிதமான நடவடிக்கையைக் கையாளுவதினுல் அடியார்கள் இம்மடாலயங்கள்மூலம முருகப்பெருமானை வழிபடும் வசதியை இழக்கப் போகின்றார்கள. இததீர்மானத்தினுல் பெரிதும் பாதிக்கப்படுகின்றவர்கள் இந்துக்களே. எல்லா மதததவர்களுக்கும் சமய வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கபபடுமென அரசாங்கம் கூறிய உறுதிமொழி பொய்ததுவிட்டது இந்துக்களுடைய மனத்தை வருத்துகின்ற இச்செயலை அரசாங்கம் நிறுத்திவைப்பது பொருத்தமாகும். அரசாங்கத்தினுடைய இவவடாத தீர்[illegible]த்தை ஆட்சேபித்துக் குறித்த மடாலயங்களின் உரிமைக்காரர்களின் கூடட மொன்று கொழுமபில் விரைவில் நடைபெறுமெனவும் அறிகின்றோம் எமது அரசாங்கம் பரந்த நோக்கததுடன் இவ்விஷயததைச் சீர்தூக்கி ஆராய்ந்து இந்துக்களுடைய மனததைத் திருப்தி [illegible] கின்றோம்.

# 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
## வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

18-2-65ல் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற வள்ளுவர்தின விழாவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி உதவி அதிபர் திருமதி R. வைத்திலிங்கமவர்கள் பேசும்போ துகுறிப்பிட்டதாவது:

2000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆயிரக்கணக்கான புலவர்கள் வாழ்ந்தனர். ஆனுல் வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு என்று வள்ளுவனைக்கொண்டே தமிழின் பெருமையை அளந்தறிகின்றோம். இல்லாள் — மனைவி முதலிய சொற்கள் வீட்டிற்குரியவள் என்ற பொருளையே தருகின்றன. தன் கணவனையன்றி வேறு ஆடவரை நினைக்காத நிலையே கற்பு எனப்படும். பெண்கள் உடலாலும உள்ளத்தாலும் மெல்லியராயிருந்தாலும கற்பைக் காப்பதில் அதிக திண்மை படைத்தவர்கள். கண்ணகியின் அறக் கற்புக் கணவன் கொல்லப்பட்டான் என்பதையறிந்ததும் மறக் கற்பாக மாறுகின்றது. இதனையே வள்ளுவரும் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும் திண்மை யுண்டாகப் பெறின்" என்றும், "தெய்வம தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள் பெய்யெனப்பெய்யும் மழை" என்றும் கூறிப் போந்தார். தமது கற்பின் வலிமையினுற் பெண்கள் தம்மையும கணவனையும் காத்து மனைக்கு விளக்கத்தைக் கொடுக்க வேண்டும் மனை சிறக்க நாடு சிறக்கும நாடு சிறகக உலகம் சிறக்கும்.

அடுத்து யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. வை. ஏரம்பமூர்த்தி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

"அருணகிரிநாதர் இறைவனை வணங்காத தலையைப் பெற்றுவிட்டேன் என வருந்துப்போது நாம் எம்மாத்திரம? மனிதன் பல வழிகளாற பொருள் தேடுகிறுன். அறததின் வழி நின்று பொருள் தேட வேண்டும். நாம ஒவ்வொருவரும் நேரமுள்ள போது நம்மால் இயன்றஅளவுக்கு அறம்செய்யவேண்டும. பிச்சைக்காரனுக்குப்பொருள் கொடுப்பது அறத்தின் ஒரு பகுதியேயன்றி அறமலல. மனத்தில் மாசின்றியிருத்தலே உண்மையான அறமாகும்.

வள்ளுவர் கூறும்வழி
எங்கள் சமய வழியே"

அடுத்ததாக, ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம, (யாழ். இந்துக் கல்லூரி) அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

உலகிலுள்ள ஒவ்வொருசமயத்தவரும வள்ளுவர் தம் சமயததவரென வாதாடுவர். சைவ சமயத்திலுள்ள சிறப்பியல்புகளை வேறு எந்த மதத்திலும் காண இயலாது மலர் மிசை ஏகினன்.......... எனத் தொடங்கும குறளில் இறைவன் அடியார்கள் உள்ளத்திலிருக்கின்றார் எனக் கூறப்படுகிறது. அவ்வாறு அடியார் உள்ளத்து உறையும் கடவுள 'மலர்மிசையேகினன்' எனக் கருதுவது சைவ சமயத்திற்றான் காணப்படுகின்றது. தமிழின் பெரும்பகுதி பக்தி இலக்கியமாகவேகாணப்படுகின்றது. அருளாளன் என்ற சிறப்புச் சைவசமயத் தெய்வத்திற்கு மட்டுமேயுண்டு. அன்பாகிய தாய் அருளாகிய குழவியை ஈன்றளிப்பாள் அத்தகைய அருள்மார்க்கத்திலுள்ள நமது சமயம் வாழ்க்கைக்கு ஊன்றுகோலாகும். ——

## ஒவ்வொருவீட்டிலும் திருக்குறள் இருக்க வேண்டும்

19-2-65 வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் வண்ணார்பண்ணை சாங்கையர் மடம் கூட்டுப்பிரார்த்தனைச் சபையின் சார்பில் திருவள்ளுவர் தினம் கொண்டாடப்பட்டது:

தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ. வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் தலைமைதாங்கினுர். அவர் தமது தலைமையுரையில் கூறியதாவது:- நாவலர் பெருமானின் கொள்கைப்படி மாசி மாத உத்தர தினமே வள்ளுவர் தினமாகும். அதனைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டியது நமது கடமையாகும். உலக மக்கள் எவராலும நன்கு பாராட்டப்பட்டு வரும் திருக்குறள் என்னும் சிறந்த நூலை நமக்கு அளித்தவர் வள்ளுவர். திருக்குறளை எல்லோரும் நன்றுகப்படித்து அதன்வழி ஒழுகவேண்டும். ஒவ்வொருவர் வீட்டிலும் திருக்குறள் இருக்கவேண்டும். நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்று கூறுவதில் நாலு என்பது நாலடியார், இரண்டு என்பது இரண்டு அடிகளையுடைய திருக்குறள் என்று குறிப்பிட்டார்,

திருவள்ளுவர் நினைவுக் கட்டுரைப் போட்டியில் முதலாவது பரிசுபெற்ற செல்வன் தி. சேதுராமனுக்குத் தலைவர் பரிசில் வழங்கினுர்.

செல்வன் தி சேதுராமன், சைவப்புலவர் வ. கநதசாமி ஆகியோர் வள்ளுவர்காட்டிய வழி என்னும் பொருள்பற்றிப் பேசினுர்கள்.

## திருவுந்தியார் (மூலமும்—உரையும்)

(1-ம பக்கத் தொடர்ச்சி)

"அனுபவமுண்டென்னில், அனுபவிப்பானும் உண்டாகும். அது இல்லையென்னில அனுபவமுமில்லை. ஆகையால், ஒன்றென்றும் இரண்டெனறும சொல்லபபடும. உணடில்லையெனனும முறைமை தவிர்ந்த இனபததைப் பொருந்துமவகை விசாரிக்கில் கர்த்தா உன்னுடனே கூடி ஒன்றுயிருப்பன்.

தூல உடம்பாய முப்பத்தோர் தத்துவமும்
மூல உடம்பாம் முதல்நான்கும் — மேலைச்
சிவமாம் பரிசினையும் தேர்நதுணர்ந்தார் சேர்ந்த
பவமாம் பரிசறுப்பார் பார். 37.

"தூல சரீரமாகிய அசுத்த மாயையிலுண்டாகிய முப்பத்தொரு தததுவமும அதற்கு மூல சரீரமாகிய முதல்நான்கு தத்துவமும் அதற்கு மேலாகிய சிவதத்துவமும இப்படியாகப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களினுடைய முறைமைகளை விசாரித்தறிநதார். இது வரையும் பொருந்திவந்த பிறவியாகிய பேற்றை அறுப்பர். இதை உணமையாக அறிவாயாக.

இதனுள் பிறவியறுத்தற்கு ஏது தத்துவ விகாரமென்பது கண்டுகொளக".

—தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினதீவு



## வரவு செலவுக் கணக்கு 1—4—63 முதல் 31—3—64 முடிய

### செலவு

| | | |
|---|---|---|
| சம்பளமும், கூலியும் (திருவிழாக்காலம் உட்பட) | | 20493-41 |
| திருப்பணி | ,, ,, | 10123-91 |
| அச்சிட்டதும், எழுத்து உபகரணங்களும் | ,, | 1776-95 |
| சில்லறைத் திருத்தம் | ,, ,, | 337-55 |
| மின்சார யந்திரம் பராமரித்தல் | ,, | 1148-14 |
| பிரயாணம் | ,, ,, | 753-35 |
| ஏற்றுக்கூலி | ,, ,, | 882-95 |
| மகா கும்பாபிஷேகம் | ,, ,, | 14397-69 |
| கால்நடை பராமரித்தல் | ,, ,, | 102-65 |
| தபால். தந்தி | ,, ,, | 121-44 |
| சில்லறைச் செலவுகள் | ,, ,, | 2195-16 |
| திருவிழாச் செலவு (சம்பளம், கூலி தவிர்த்து) | | 4894-57 |
| ரூபா, | | 57227-77 |

### வரவு

| | | |
|---|---|---|
| அர்ச்சனை | | 12462-15 |
| அபிஷேகம் வரவு | 4008-10 | |
| கழி: ,, செலவு | 754-89 | 3253-21 |
| திருவிழா | | 2775-00 |
| உண்டியல் | | 9571-24 |
| காணிக்கை | | 18628-75 |
| வாடகை | | 2703-60 |
| நித்திய படித்தரம் வரவு | 9757-25 | |
| கழி, ,, செலவு | 5969-51 | 3787-74 |
| சந்தாப்பணம் | | 430-00 |
| வட்டி | | 18-79 |
| சில்லறை வரவு | | 292-55 |
| வருமானத்திற்கு மேலான செலவு | | 3304-74 |
| ரூபா: | | 57227-77 |

## சமதிட்டக் கணக்கு

### மூலதனம்

| | | |
|---|---|---|
| சென்ற வருட இருப்பு நிலை மீதி: | 250711-20 | |
| கூட்டு, திருப்பணி நிதி: | 15684-16 | |
| | 266395-36 | |
| கழி, வருமானத்திற்கு மேலான செலவு: | 3304-74 | 263090-62 |
| **நட்பு வருடச் செல்மதி** | | |
| பிணைப்பணம் | 500-00 | |
| பல புள்ளி | 956-77 | 1456-77 |
| ரூபா: | | 264547-39 |

### விக்கிரக மூர்த்தி: நிலையான சொத்துக்கள்

| | | |
|---|---|---|
| சென்ற வருட இருப்பு நிலை மீதி | 260-25 | |
| இவ்வருடச் சேர்ப்பு | 1828-10 | 2088-35 |
| திரு ஆபரணங்கள் | | 8607-50 |
| **பவுண், வெள்ளி:** | | |
| சென்ற வருட இருப்பு நிலை மீதி | 7564-75 | |
| இவ்வருடச் சேர்ப்பு | 1599-00 | 9163-75 |
| கால்நடை | | 90-00 |
| **வாகனம், தேர்:** | | |
| வாகனம் | 9443-10 | |
| தேர் | 125000-00 | 134443-10 |
| ஆதனம் | | 4225-00 |
| **கட்டடங்கள்:** | | |
| தேர் மண்டபம் | 30986-06 | |
| வயிரவர் கோவில் | 2602-66 | |
| மணிக்கூட்டுக் கோபுரம் | 2382-30 | |
| கொட்டகை | 7059-01 | 43030-03 |
| மின்சாரமும், இணைப்புகளும் | 7461-12 | |
| கழி: விற்கப்பெற்ற யந்திரம் | 2082-00 | |
| | 5379-12 | |
| கோவில் மின்சார நிலையக்கணக்கிற்கு மாற்றம் | 5379-12 | |
| **கோவில் மின்சார நிலையம்:** | | |
| சென்ற வருட இருப்பு நிலை மீதி | 14068-82 | |
| இவ்வருடச் சேர்ப்பு | 2903-75 | |
| கொண்டுவந்த மின்சார நிலையக்கணக்கு | 5379-12 | 22351-69 |
| **தளபாடமும், இணைப்பு உறுப்புக்களும்:** | | |
| சென்ற வருட இருப்பு நிலை மீதி | 23461-55 | |
| இவ்வருடச் சேர்ப்பு | 975-65 | 24437-20 |
| **உள் வீதித் தளம்:** | | |
| சென்ற வருட இருப்பு நிலை மீதி | 6416-93 | |
| இவ்வருடச் சேர்ப்பு | 2883-00 | 9299-93 |
| பல புள்ளி வருமதிகள் | | 2659-70 |
| **பணம்:** | | |
| மெர்க்கண்டையில் வங்கியில் நிலையான வைப்புக்கணக்கு | 1118-84 | |
| கையிருப்பு | 3032-30 | 4151-14 |
| ரூபா: | | 264547-39 |

தர்ம பரிபாலன சபை சார்பாக,

செ. சிவஞானம், கௌரவ தலைவர். கா. ஆறுமுகம், கௌரவ காரியதரிசி. கா. க. சிவசிதம்பரம், கௌரவ தனாதிகாரி.

நயினதீவு 17—2—65.

இன்றைய எமது அறிக்கைக்கு அமைவாக,
இவை சரியென அத்தாட்சிப்படுத்துகிறேன்.

கௌரவ கணக்குப் பார்வையாளர்; கு சச்சிதானந்தா, தத்துவக் கணக்கறிஞர்,
கொழும்பு.
9—2 65

M 279 26-2-65

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இலக்கம் M B 4917.

வட்டுக்கோட்டை கிழக்கு
மாரிமுத்தர் ஆறுமுகம்
நாராயணசுவாமி
-வழககாளி.

எதிராக

வட்டுக்கோட்டை மேற்கு
1. தில்லையம்பலம் இராமசாமி கைம்பெண் காலஞ்சென்ற சின்னம்மா
2. இராமசாமி இரங்கநாதன்
3. இராமசாமி இராமச்சந்திரன்
4. இராமசாமி சத்திபாமா
5. தொல்புரம் கந்தையாதர்ம லிங்கம் -எதிராளிகள்.

(2ம் எதிரி, காலஞ்சென்ற 1ம் எதிரியின்சொத்தின், நேரடியாகவும்சட்டப்படியானபிரதிநிதியும்)

இவ்வழக்கில் எனக்குக் கிடைத்த உத்தரவின்படி கீழ்க்காணும் ஆதனங்கள் 1965ம் ௵ மார்ச் (பங்குனி) மீ 27 ௨ (27-3-65 சனிக்கிழமை முற்பகல் பத்து மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- மூதல் வட்டி ரூபா 25,675. மேலும் ரூபா 21,000 க்கு 18-12-58 தொடக்கம் 21-3-63 வரைக்கும் வருடமொன்றுக்கு 7 வீத வட்டியும் அதன்பின் முழுத தொகைக்கும் இறுகும்வரை வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கேட்டுச் செலவு ரூபா 442-61 சதமும் மேலும் முத்திரை மற்றும் செலவு ரூபா 60-ம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி, வட்டுக்கோட்டைக் கோயிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கிறை 'கணபதி சீமா' கிலப் பரப்பு 10½ லும் அதே இறை 'கணபதி சீமா' கிலப்பரப்பு 6-ம் சேர்ந்து மொத்தமாக 16½ கிலப் பரப்பு கல்வீடுகள், புகுமண்டபம் குசினி, குடி[illegible] கிணறு, செய்பயிர்வான்பயிர்களும், இதற்கெல்லை கிழக்கு ஆறுமுகம் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளர்களுக்கும் கணபதிப்பிள்ளை மனைவி செல்லமுத்துவுக்குமுரிய ஆதனங்கள். வடக்கு இதில் குறிப்பிட்டிருக்கும் 2ம் ஆதனமும், விஞசித்தம்பி வேலுப்பிள்ளையினதும், நடராசா கைம்பெண் நாகரெத்தினத்தினதுமாதனங்கள். மேற்கு நெல்லிநாதர் செல்லப்பாவின் உரிமைக்காரர்களினுதனம். தெற்கு ஒழுங்கை. இது முழுவதும்.

2. ஷை வட்டுக்கோட்டை மேற்கிறை 'வேப்பொல்லையும் சிங்கவளவும்' கிலப்பரப்பு 3½ செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை மனைவி செல்லமுததுவினுதனம். வடக்கு றோட்டும, விஞசிததம்பி வேலுப்பிள்ளையினுதனமும். மேற்கு 1ம் ஆதனமும், விஞசித்தம்பி வேலுப்பிள்ளையின் உரிமைக்காரர்களினுதனமும். தெற்கு 1ம் ஆதனம் இது முழுவதும்.

3. ஷை கோயிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை "கோணன் தோட்டமும் பறயான் தோட்டமும்" கிலப்பரப்பு [illegible] வீடும். இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் [illegible] கந்தசாமிகோவிலாதனம், மேற்கு கணபதிப்பிள்ளை தில்லைநாதனினுதனம், இது முழுவதும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொம்மிசனர்,
ஏலவிற்பனவாளரும்
விலைமதிப்பாளரும்.
"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம், 23-2-65.
M 280 26-2-65.

## மகா சிவராத்திரித் திருநாளிற் சைவ சமயப் பிரசங்கம்

நிகழும் குரோதி௵ மாசிமீ 18௨ (1-3-65) திங்கட்கிழமை இரவு மகா சிவராத்திரித்திருநாளில் அராலி தெற்கு, தறணன் முருகமூர்த்தி கோவிலில் ஷையூர் சைவசமய இலவசப் பிரசாரகர் திரு வே, கந்தையா அவர்களால்,

I. 'மகா சிவராத்திரி" என்னும் பொருள்பற்றியும்
II. "திருநாளைப்போவார்" (பக்த நந்தனுர்) என்னும் பொருள்பற்றியும் இன்னிசைப் பாடல்களுடனும் —
சைவசாத்திர ஆதாரங்களுடனும்

சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறும் எனவும், ஷை இருபிரசங்கங்களாற் தற்காலம் நிகழும் அனேக மயகக விளக்கங்கள் தெளிவு செய்யப்பெறும் எனவும் அறிகிறோம்.

**அ. இ. பொ. சே. சங்கம் சமயப்பிரசாரம்**

**2-3-65** செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி முதல் 7 மணி வரை திரு ச தம்பிஐயா அவர்கள் 'நாம்ஏன்பிறந்தோம' என்னும் பொருள்பற்றி நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில பிரசங்கம் செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
மாவட்டக் கோட்டில்
சண்முகம் விஜயரத்தினம்,
நல்லூர் —வழக்காளி
இல. M B, 4487
எதிராக
1. இளையதம்பி செல்வத்துரையும்
2. பெண் சிவக்கொழுந்தவும்
3. கார்த்திகேசு கோபாலசிங்கம் அல்லது இரத்தினம், சிவியாதெரு
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் M,B. 4487-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கட்டளைப்படி இதன்கீழ் விபரிக்கப்படு மாதனம் 1965-ம் ஆ சித்திரை மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை மூற்பகல் 9 மணி 30 நிமிடமளவில் அவ்வாதனத்திற்குள் நின்று என்னால் பிரசித்த ஏலததில் விற்கப்படு.

தீர்வைத் தொகை:-
முதலும் வட்டியுமாக 9,185/- ரூபாவும் இன்னும் 28-12-1961 தொடக்கம் 15-3-1962 வரைக்கும் 7000 ரூபாவிற்கு நூற்றிற்குப் பத்துவீதவட்டியும் கூட்டிய கூட்டுத்தொகைக்கு 15-3-1962 தொடக்கம் முழுப் பணம் இறுக்கும் வரைக்கும் நூற்றிற்கு ஐந்துவீத வட்டியும் ஏற்பட்ட செலவு 172/88 சதமும், வெலியாத்துச் செலவு 53/15 சதமும் இனிமேலேற்படுஞ் செலவு 36/25 சதமும் (செலவால் கொடுத்த 165 ரூபாவும், முதலால் 30-4-63-ல் கொடுத்த ரூபா 1000 கழித்து மிகுதி).

ஆதனடாப்பு:
வடமாகாணம் யாழ்ப்பாணப் பிரிவும் மாவட்டமும், சுண்டிகுழி குறிச்சி சிவியாதெரு இறை "பட்டங்கட்டி வளவும், பத்தினி வளவும், புளியடி வளவும்" இரு துண்டுகளுஞ் சேர்ந்து நிலப்பரப்பு 8 குளிகள் 10 68/75-ம் வீடும், போட்டிக்கோவும், பயிர்களும், வடக்குக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும், வழி வாய்க்காலுரித்தும். எல்லை கிழக்கு ரோட்டும், கந்தையா சரவணமுத்துவினுதனமும், வடக்கு இளையதம்பி இராசையாவினுதனம், தெற்கு கந்தையா சரவணமுத்துவினுதனம். இவ்வெல்லைக்குட்பட்டவை யாவும், பதிவு இலக்கம் D 239/286.

தா, க. பொன்னுத்துரை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"அகிலகம்" 28/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம், 25-2-65
M. 284 26-2-65

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M,B. 503.
யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
உரும்பிராய் கிழக்கு,
யாழ்ப்பாணம்
1, வல்லிபுரம் அப்பாத்துரையும்
2, மனைவி தங்கரத்தினம்
—வழக்காளிகள்
எதிராக
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்
1, கணபதிப்பிள்ளை செல்லையாவும்
2- மனைவி நல்லம்மா
—எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு M.B. 503-ஆம் இலக்க வழககில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் வபரிக்கப்படும் காணியை 1965-ம் ஆண்டு 3-ம் திகதி (3 - 4 - 65) சனிககிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 2996/71-ம். இன்னும் ரூபா 2000-க்கு 13 9-55 தொடக்கம் 9-11-55 வரைக்கும் 7 வீத வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 201/75-ம். இதில் ரூபா 1000 கொடுபட்டது, ஏற்கு மியல்பாய் ரூபா 36 பெறுமதியுள்ள முத்திரைகள் கொமிஷனல் ஒட்டப்பட்டது.

காணியின் விபரம்:
வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர்கோவிற்பற்று கொக்குவில் இறை "கினைத்தது முடித்தான்" பர. நில. லாச்சம் 3½-ம் வீடும் பனைகளும் வான் பயிர் செய்பயிர்களும் கிழக்கே ஒழுங்கையிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் தண்ணீர் பாவப்புரித்தும் வழக்கம்போல் வடக்கெல்லை ஒழுங்கைக்கூடாக ரோட்டுககுப் போக ரோட்டுக்குப் போகும் வழிப்பாதை உரித்தும், எல்லை கிழக்கு ஆறுமுகம் வயித்திலிங்கத்தின் ஆதனம், வடககு செல்லையாவின் ஆதனம், மேற்கு ஆறுமுகம் தம்பையாவினதும் பங்காளர்களுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு சந்திரசேகரம் பெண் செல்லம்மாவின் ஆதனம்.

க. செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
முருகன் இல்லம்,
இணுவில், 22-2-65.
M 281 26-2-65.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M,B' 4400
1. 278, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் கிறீஸ்துவ சேமலாப சங்கம்
—வழக்காளி
எதிராக
1. வயித்தி டேவிட் கணபதிப்பிள்ளையும்
2. பெண் தங்கரட்ணம் நேசம்மாவும், 195 குருசோல் வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம்
3, சாமுவேல் முருகேசு குணரத்தினமும்
4. பெண் மேரி அரியமலர் குணரத்தினமும், உரும்பிராய்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B. 4400-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி, பின்னுல் விபரிக கப்படும் ஒருதுண்டுக் காணியை, 1965-ம்ஞு பங்குனிமீ 27உ சனிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 6740 - ம், 20-11-1961 தொடககம் 14-3-1962 வரைக்கும் ரூபாய் 5000-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 295-20 சதம். இதில் ரூபாய் 150 கோட்டுச் செலவால் கொடுபட்டுள்ளது,

ஆதன விபரம்:
வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிககுளி கோவிற்பற்று, சுண்டிககுளி இறை "பணிககன் பெரிய வளவு, கஞ்சா தோட்டப், நெஞ்சி தோட்டம்" நில. பர 4 குளி 9, செய்பயிர் வான்பயிர்களும், கிழககு வேலி அடைக்கிற உரிததும். எல்லை கிழக்கு வயித்தி டேவிட் கணபதிப்பிள்ளை பெண் ரத்தினம் நேசம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு றெஜினோல்ட் விலலியம் அழகக்கோனின் ஆதனம், மேற்கு தம்பிமுத்து சாமுவேலின் ஆதனம் தெற்கு ரோட்டு, இவ்வாதனம் D 47/281-ம் இலக்கததில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாதனம் சாமுவேல் முருகேசு குணரத்தினத்துக்கும் பெண் மேரி அரியமலர் குணரத்தினத்துககும் (3-ம், 4-ம் எதிராளிகள்) நொத்தாரிஸ் டி, ராசதுரை அவர்களால் 25 - 7 - 59 இல் 3364-ம் இலக்கத்தில் எழுதப்பட்ட ஈட்டுறுதிப்படி இரண்டாம் ஈடாகககட்டப்பட்டுள்ளது, தொகை ரூபா 1000, வட்டி வீதம் 12. ஆனுல் வட்டியை மூன்று மாதத்திற்கு ஒருமுறை கொடுத்தால் 10 வீதம்.

நீ. அன்ரனிப்பிள்ளை,
கொம்மிஷனர்&விலைமதிப்பாளர்.
261, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
M. 282 26-2-65.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, M.B. 5251
கட்டுடை, மாணிப்பாய்
சின்னத்தம்பு இராசநாயகம்
—வழக்காளி
எதிராக
சாவகச்சேரி
முகமது லெப்பெ குசெயின்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M,B, 5251-ம் இலககவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக காணியை, 1965-ம் ஞு சித்திரை மீ 3உ சனிககிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக்காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 17 000-ம்- 29-11-1962 தொடககம் 24-9-1963 வரைக்கும் ரூபாய் 15,000-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத தொகைக்கும் இறுககும் வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 342-04 சதம்.

ஆதன விபரம்:
வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறை, 'கட்டுகனே' நிலப்பரப்பு ஆறு (6) எண்ணைக்குதமும், வீடும் மறு கட்டிடங்களும் பயிர்களும் அதற்குச் சேர்ந்தவைகளும், எல்லை கிழககு ரோட்டு, வடககு தம்பு சிவகுருவின் ஆதனம், மேற்கு சின்னத்தம்பி தாமலிங்கத்தின் ஆதனம், தெற்கு ஒழுங்கை,

இவ்வாதனம காணிக்கந்தோரில் F 329/208-ம் இலககத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது

நீ. அன்ரனிப்பிள்ளை,
கொமமிஷனர்&விலைமதிப்பாளர்
261, ஆஸபத்திரி வீதி,
யாழ்ப்பாணம.
M 283 26-2-65.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கரம்பன்,
தப்பிமுத்து குழந்தைவேலு
—வழக்காளி
இல, M.B. 5913
எதிராக
சரவணை,
1. வயித்தி சந்தியாவும்
ஊர்காவற்துறை
2. பிலிப்பு ஸெபஸ்டியும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B, 5913-ம் இலகக வழக்கில் எனககுக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் வபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1965ஞு பஙகுனிமீ 27-ம்உ (27 - 3 - 65) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 423, இன்னும் ரூபா 300-க்கு 30-7-63 தொடககம் 24-4-64 வரைச்கும் 12 வீத வட்டியும் அதன்மேல் மூழுத் தொகைககும் இறுககும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 48-20.

காணி விபரம்:
வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக சரவணையிறை ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று திவுப்பிரிவு "விளாத்திக்குளி தெற்கு பர. நில- இலா. 1½, 0 குளி மண் வீடு கிணறு பனைமரங்கள் தென்னை மரங்களுடன், இதற்கெல்லை கிழக்கு பிள்ளையான் பெண் சிவகாமியினுதனம் வடககு சந்தியா ஜோவேல் பெண் தங்கம்மாவுக்கும் அந்தோனி பேதுருவுக்கும் பெண் சவரியாச்சிக்கு முரிய வாதனம், மேற்கு பிலிப்பு சவரியினுதனம், தெற்கு சுப்பன் பெண் பூரணத்தினுதனம்.

செ விசாகரெத்தினம்
கொமிசனரும்விலைமதிப்பாளரும்,
133 பருத்தித்துறை றோட்டு.
நல்லூர், யாழ்ப்பாணம்,
8-2-65.
M. 278 26-2-65.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண் வீதி 2-ம் ஒழுங்கை 2-ம் இலக்கத்தில்வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 26-2-1965 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14.

இவ்வாரம் 28-2-65 — 6-3-65

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

எதிர்ப்புகள் நீங்கி வெற்றி உண்டாகும். பழைய முதலீடுகளால் பயன். சுறிது புகழ் குறையும்,

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகினி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

தாய் சுகம் குன்றும். ஊர்திகளால் செலவு. உடல் நலம் குறையும். கண் நோய். தொழிற்துறையில் முன்னேற்றம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

ஞாயிறு, திங்கள் எச்சரிக்கை. வியாபாரத்துறையில் வெற்றியுள்ள வாரம். நிலங்களால் நன்மை:

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

செவ்வாய் புதன் வியாழன் எச்சரிக்கை. நண்பர்களுடன் கருத்து வேறுபாடும் கலகமும், கடைசியிரு நாட்களும் புது முயற்சிகளுக்கு உகந்தவை.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

சுகக்குறைவு, எளிதில் கோபம் உண்டாகும், அலுவலகத்தில் தொந்தரவு. குடும்பக்குழப்பம், வியாழன் பிற்பகல் வெள்ளி சனி எச்சரிக்கை.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

கலசங்களுக்குமுந்துதல். அதிக செலவு புறங்கூறுபவர்களிடம்கவனம். பகைவரை வெல்லலாம்.

**துலாம்**, சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

பொருள்வரவு சுகம்குறையும். குடும்பத்தொல்லை. எதிர்ப்புண்டு.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

குடும்பக் குழப்பம். நினைத்தவை நிறைவேறு. உட்பவகைவர்களிடம் கவனம்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

பொருள்வரவு. பகைவர்க்குத் தோல்வி புகழ்வரவு. பொதுவாழ்வில் வெற்றி. விவசாய வளர்ச்சி.

**மகராராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

அலுவலகத்தில் துன்பம். நண்பர்களுடன் கருத்து வேறுபாடும் கலகமும். கண்நோயும் வயிற்றுக் குழப்பமும் உண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம். சதயம், பூரட்டாதி

நிம்மதியில்லை. குடும்பச்செயல்களில் குழப்பம். அதிக செலவு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதிரேவதி. 1, 2,3ம் பாதம்.

பொருள்வரவு. பகைவர்க்குத் தேர்லவி. உடன் பிறந்தாரால் உதவி சுகக்குறைவு.

## சிவப்பிரகாசம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நுட்பமும் அகலமுங்காட்டி வழிநூல்களில் உண்டான சூத்திரம் பன்னிரண்டும இந்நூலிலே வகுத்து வியாக்கியானஞ் செய்ததென அறிக.

இஙஙனம் பலவகையாக வியாக்கியானம் எழுதுகைக்கு விதியேதென்னில்,

"பொழிப்பகல நுட்பநூ லெச்சமேன் றுறுக்
கோழித்தகலங் காட்டாதார் சொற்கள் — பழிப்பின்
நிரையாமா சேக்கு நெடுங்குன்ற நாட
உரையாமோ நூலுக்கு நன்கு." (நாலடி. 319)

என்றமையால், நூலகளுக்கு நால்வகைப் பொருள்களுங் கூட்டி வியாக்கியானஞ் செய்யும் விதி உண்டாகையால், அவ்விதியைப்பற்றிப் பொழிப்பும் அகலமும் நுட்பமும் நூலெச்சமுங் காட்டி வியாக்கியானம் எழுதினதென அறிக.

அஃதாவது,
"பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப்
பிண்ட மாகக் கொண்டுரைப் பதுவே."
என்றும்,
"அகல மெனப் தாசறற் கிளக்கின்
விகல மின்றி விரித்துரைப் பதுவே."
என்றும்,
"நுட்ப மெனப்பது நுழைபொரு ளியலவும்
திட்ப மாகத் தெளியக் கூறல்."
என்றும்,
"எச்ச மெனப திருபொரு ளொழிவு
மிச்ச மாக விரித்துரைப் பதுவே"
என்றும வரும் இலக்கண விதியைப்பற்றியென அறிக.

(வளரும்)